

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

"உழைப்பின் கௌரவத்தை மக்கள் உணரும்படி இராட்டை செய்கிறது. கோடிக்கணக்கான மக்களுக்கு கதர் கௌரவமான உழைப்பைத் தருகிறது."

– மகாத்மா காந்தியடிகள்

கைவினைஞர்கள், நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும் இவர்களது வேலையின்மையினை கருத்தில் கொண்டும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், ஏப்ரல் 1960–இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய சட்டம், 1959–இன்படி உருவாக்கப்பட்டது.

கிராமப்புரப் பகுதிகளில், கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்து அவற்றை மேம்படுத்துவதோடு கைவினைஞர்களையும் நலிவுற்ற மக்களையும் ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார நிலையினையும் உயர்த்துவதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

1. நோக்கங்கள்

அ) கதர் மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

ஆ) ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் சமூக நோக்கத்தினை நிறைவேற்றுதல்.

இ) சுற்றுச்சூழலுக்கு இணக்கமான, எளிதில் விற்கக் கூடிய கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும்

பொருளாதார நோக்கங்களை செயல்படுத்துதல்.

ஈ) ஏழை மக்களிடையே தற்சார்பு நம்பிக்கையினை உருவாக்கும் ஒரு வலுவான கிராம சமூக உணர்வினை வளர்க்கும் பரந்த நோக்கத்தினை அடைதல்.

உ) கிராம கைவினைஞர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் அவர்களின் உற்பத்தித் திறன் மற்றும் இலாபத்தினை உயர்த்துதல்.

2. நிருவாகம்

மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் அரசினால் நியமனம் செய்யப்படும் கீழ்க்காணும் அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு சட்டரீதியான அமைப்பாக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இயங்கி வருகிறது:

அ) அரசு செயலாளர்,

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.

ஆ) அரசு துணைச் செயலாளர், நிதித்துறை.

இ) தலைமைச் செயல் அலுவலர்,

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

ஈ) தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர்.

உ) நிதிநிலை ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

தலைமைச் செயல் அலுவலர் அவர்களால் வாரியத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாரியத்தின் செயல்பாடுகள், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியது.

3. கதர்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் "கதர்" முக்கிய பங்கு வகித்தது. கதர் இந்திய மக்களிடையே தேசபக்தி, அமைதி மற்றும் எளிமை போன்ற உணர்வுகளை ஏற்படுத்தியும், இந்திய சுதந்திர போராட்ட இயக்கத்திலும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்கியது. இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வின் வழிமுறை ஆகியவற்றை கதர் தாங்கி நிற்கிறது. இராட்டைகள் மூலம் பஞ்சிலிருந்து கையினால் நூற்கப்படும் நூலைக் கொண்டு கதர்த் துணி நெய்யப்படுகிறது. கதர்த் துணி, இந்திய நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப இயற்கையானது, திடமானது மற்றும் உடலுக்கு இதமானது.

சந்தையில் பாலியெஸ்டர் வந்த பின்பு கையினால் நூற்கப்பட்ட 67% கதர் நூலும் மற்றும் 33% பாலியெஸ்டர் நூலும் சேர்க்கப்பட்டு "பாலிவஸ்திரா" வகை நெய்யப்படுவதால், தற்போது கதர் என்பது "கதர் பருத்தி", "பாலிவஸ்திரா" மற்றும் "கதர் பட்டு" ஆகிய மூன்று வகைகளை உள்ளடக்கியதாகும்.

3.1. கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் வாரியத்தின் முக்கிய செயல்பாடுகளுள் ஒன்றான கதர் உற்பத்தியானது, கிராம கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. கதர் இரகங்கள் உற்பத்தியின் கீழ் நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை, சாயமிடுதல் மற்றும் அச்சிடுதல் போன்ற பணிகள் முக்கிய செயல்பாடுகளாக விளங்குகின்றன. கதராணைக்குழுவின், மத்திய பட்டைப் பஞ்சு

ஆலையிலிருந்து, பட்டைப் பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டு, 14 கதர் உப கிளைகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது. கதர் உப கிளைகளிலிருந்து 24 கிராமிய நூற்பு (RTC) நிலையங்களின் மூலம் நூற்பாளர்களுக்கு பட்டை பஞ்சு வழங்கப்பட்டு, அவை நூலாக நூற்கப்பட்டு மீளவும் கதர் உப கிளைகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவ்வாறு பெறப்படும் சிட்டங்கள் (நூல்) 14 கதர் உப கிளைகள் மூலம் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு கோராத்துணியாக உற்பத்தி செய்யப்பட்டு மீளவும் கதர் உப கிளைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

வாரியம் மட்டுமின்றி, கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் சான்றளிக்கப்பட்ட 70 சர்வோதய சங்கங்களும் தமிழ்நாட்டில் கதர் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையின் மூலம் கிராமப்புர

மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன.

கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்தி உப கிளைகள் மூலம் சுமார் 10,000 நெசவாளர்களுக்கு குறிப்பாக ஊரக மகளிருக்கு நூற்றல், நெய்தல் போன்ற வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.

வாரியம் ரூ.231.66 இலட்சம் மதிப்புள்ள கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா இரகங்களை, 2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) உற்பத்தி செய்ததுடன் சர்வோதயா சங்கங்களின் உற்பத்தி இரகங்களுடன் சேர்த்து ரூ.506.42 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.

வாரியத்தில் செயல்பட்டு வரும் கதர் உற்பத்தி அலகுகளின் விவரம் பின்வருமாறு:

I. கிராமிய நூற்பு நிலையங்கள்

வ.எண்	மாவட்டம்	அலகின் இருப்பிடம்
1.	திருப்பூர்	பூளவாடி
2.		அவிநாசி
3.		வெள்ளக்கோயில்
4.		கொளத்துப்பாளையம்
5.	ஈரோடு	காவிலிபாளையம்
6.		கெட்டிச்செவியூர்
7.	சேலம்	விருதாசம்பட்டி
8.		நார்த்தம்பட்டி
9.	கோயம்புத்தூர்	சூலூர்
10.	திருச்சிராப்பள்ளிராப்பள்ளி	கருங்குளம்
11.	கரூர்	தென்னிலை
12.	நாமக்கல்	நாமக்கல்
13.	திண்டுக்கல்	சின்னாளப்பட்டி
14.	புதுக்கோட்டை	திருவரங்குளம்
15.	மதுரை	அன்னமார்பட்டி
16.	சிவகங்கை	கண்டனூர்
17.	விருதுநகர்	வன்னியம்பட்டி
18.		ஆர்.என்.பட்டி

19.		மங்காபுரம்
20.	தென்காசி	பாவூர்சத்திரம்
21.		பெருமாள்பட்டி
22.	கன்னியாகுமரி	அகஸ்தீஸ்வரம்
23.		தேவிகோடு
24.		மூதலாறு

II. கதர் உப கிளைகள்

வ.எண்	மாவட்டம்	அலகின் இருப்பிடம்
1.	திருப்பூர்	பூளவாடி
2.		அவிநாசி
3.	ஈரோடு	காவிலிபாளையம்
4.		கெட்டிச்செவியூர்
5.	கோயம்புத்தூர்	சூலூர்
6.	சேலம்	காட்டாம்பட்டி
7.	கரூர்	தென்னிலை
8.	நாமக்கல்	நாமக்கல்
9.	திண்டுக்கல்	சின்னாளப்பட்டி
10.	மதுரை	உசிலம்பட்டி
11.	சிவகங்கை	கண்டனூர்
12.	விருதுநகர்	வத்திராயிருப்பு
13.	தென்காசி	கீழப்பாவூர்
14.	கன்னியாகுமரி	மார்த்தாண்டம்

2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) கதர் கிராமத் தொழில் வாரியமானது, கதர் இரகங்களை உற்பத்தி செய்வதற்காக 718 நூற்பாளர்கள் மற்றும் 160 நெசவாளர்களை நேரடியாக பணிகளில் ஈடுபடுத்தியுள்ளது . கதர் அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்திட "காதி கிராப்ட்" என்ற பெயரில் 39 விற்பனை நிலையங்களை வாரியம் நடத்தி வருகிறது.

கதர் வாரிய அலகுகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

(ரூ.இலட்சத்தில்)

வருடம்	உற்பத்தி	விற்பனை
2022–2023	720.66	1,186.20
2023–2024	469.53	1,042.44
2024–2025	231.66	506.42

(பிப்ரவரி 2025 வரை)		

3.2. கதர் பட்டு

கதர் பட்டு உற்பத்தி என்பது பாரம்பரியமாக செய்யப்பட்டு வரும் ஒரு தொழிலாகும். பழம்பெருமை வாய்ந்த பட்டுப் புடவைகள் வாரியத்தில் உள்ள 5 கதர் பட்டு உற்பத்தி கிளைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள் தனித்துவமிக்கதாக இருப்பதாலும், நியாயமான விலையில் கிடைப்பதாலும், தரம் மற்றும் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நெய்யப்படுவதாலும் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. மத்திய பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு அடையாளமாக வழங்கப்படும் "சில்க் மார்க்" லேபிள், வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகளுக்கு வழங்கப்படுகிறது.

வாரியத்தால் சுமார் 124 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

கதர் பட்டு உப கிளைகள்

வ.எண்	மாவட்டம்	நெசவு மையம்
1.	தஞ்சாவூர்	கும்பகோணம்
2.	திண்டுக்கல்	நரிக்கல்பட்டி
3.	சேலம்	சேலம்
4.		தாரமங்கலம்
5.	கோயம்புத்தூர்	வடவள்ளி

பட்டு இரகங்களின் கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

வருடம்	உற்பத்தி	விற்பனை
2022–2023	496.65	657.29
2023–2024	498.61	526.81
2024–2025 (பிப்ரவரி 2025 வரை)	469.80	354.66

4. கிராமத் தொழில்கள்

கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதில் வாரியம் முக்கிய பங்கு வகிக்கிறது. கிராமப்புரங்களில் வசிக்கும் கைவினைஞர்களின் மனித ஆற்றலைப் பயன்படுத்தி அவர்களின் பாரம்பரிய திறமைகளை வெளிக்கொணர்ந்து இலாபகரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்தம் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதே கிராமத் தொழில்களின் முக்கிய நோக்கமாகும்.

வாரியத்தின் கீழ் சோப்பு, தச்சு மற்றும் கருமாரப் பொருட்கள், தோல் பொருட்கள், தேன்

மற்றும் இதர கிராமத் தொழில் உற்பத்தி பிரிவுகள் ஆகியன இயங்கி வருகின்றன.

4.1. சோப்புத் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வரும் பல்வேறு கிராமத் தொழில்களில் சோப்புத் தொழில் முதன்மையான இடத்தைப் பெற்று இலாபகரமான தொழிலாக விளங்கி வருகிறது. வாரியத்தின் கீழ் 5 குளியல் சோப்பு அலகுகள் , ஒரு சலவை சோப்பு அலகு , ஒரு டிடெர்ஜெண்ட் சோப்பு அலகு, ஒரு டிடெர்ஜெண்ட் பவுடர் அலகு மற்றும் ஒரு திரவ சோப்பு அலகு ஆகிய ன இயங்கி வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

I – குளியல் சோப்பு அலகுகள்

வ.எண்	மாவட்டம்	இடம்
1.	செங்கல்பட்டு	திருக்கழுக்குன்ற

		ம்
2.	திருச்சிராப்பள்ளிராப்பள்ளி	சமயபுரம்
3.	ஈரோடு	மொடக்குறிச்சி
4.	சிவகங்கை	கண்டனூர்
5.	கன்னியாகுமரி	மயிலாடி

II – சலவை சோப்பு அலகு

வ.எண்	மாவட்டம்	இடம்
1.	திருவள்ளூர்	பூண்டி

III – டிடெர்ஜெண்ட் சோப்பு அலகு

வ.எண்	மாவட்டம்	இடம்
1.	கடலூர்	பண்ருட்டி

IV – டிடெர்ஜெண்ட் பவுடர் அலகு

வ.எண்	மாவட்டம்	இடம்
1.	செங்கல்பட்டு	மாமண்டூர்

V – திரவ சோப்பு அலகு

வ.எண்	மாவட்டம்	இடம்
1.	சிவகங்கை	கண்டனூர்

மேற்காணும் சோப்பு அலகுகளில் குமரி, குறிஞ்சி சந்தனம், குறிஞ்சி வேம்பு, மூலிகா, நித்தம், காதி ப்ராக்ரன்ஸ், கார்பாலிக் மற்றும் டிரான்ஸ்பரண்ட் குளியல் சோப்பு இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் குமரி சோப்பு, மக்கள் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குவதுடன் சந்தையில் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

மேலும், "கோபுரம்" எனும் வணிகக் குறியீட்டுடன் சலவை பார் சோப்பு, டிடெர்ஜெண்ட் கட்டி மற்றும் டிடெர்ஜெண்ட் தூள் ஆகியவை மற்றும் "சாரல்" ஷாம்பு, "வைகை" கை கழுவும் திரவம், "எழில்" குளியல் திரவம் மற்றும் திரவ டிடெர்ஜெண்ட் ஆகிய திரவ சோப்பு இரகங்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

ரூ.1,294.95 இலட்சம் மதிப்பிலான சோப்பு பொருட்கள் 2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) உற்பத்தி செய்யப்பட்டு ரூ.1,515.78 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

4.2 தச்சு மற்றும் கருமாரத் தொழில்

கிராமப்புர கைவினைஞர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்பு அளிப்பதில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் மற்றொரு முக்கிய கிராமத் தொழிலாக திகழ்ந்து வருகிறது. வாரிய கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் தச்சு மற்றும் கருமார அலகுகள் இயங்கி வருகின்றன:

வ.எண்	மாவட்டம்	அலகு இருப்பிடம்
1.	இராணிப்பேட்டை	அரக்கோணம்
2.	வேலூர்	பள்ளிகொண்டா
3.	திருநெல்வேலி	பேட்டை
4.	சிவகங்கை	கண்டனூர்

அரசுத்துறைகள், நீதிமன்றங்கள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், மருத்துவமனைகள், இந்து சமய அறநிலையத்துறை, காவல்துறை, கல்வி நிறுவனங்கள், பிற அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான மரம் மற்றும் இரும்பு தளவாடங்கள் சிறந்த முறையில் தயார் செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மண்பாண்டத் தொழிலாளர்களின் பொருளாதார நிலை மேம்பட நவீன தொழில்நுட்பத்துடனும் மாறுபட்ட வேகத்துடனும் , மின்சாரத்தில் இயங்கக்கூடிய மண்பாண்டச் சக்கரங்கள் தச்சு மற்றும் கருமார அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு அரசால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) இவ்வலகுகளில் ரூ.625.93 இலட்சம் அளவிற்கு உற்பத்தியும், ரூ.428.67 இலட்சம் அளவிற்கு விற்பனையும் செய்யப்பட்டுள்ளது.

4.3. தோல் அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் பல்வேறு தொழில்களில், பழமையான தோல் தொழிலும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் தற்போது 4 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

வ.எண்	மாவட்டம்	இடம்
1.	திருவள்ளூர்	அம்பத்தூர்
2.	சேலம்	குகை
3.	திருநெல்வேலி	பாளையங்கோட்டை

வ.எண்	மாவட்டம்	இடம்
4.	கன்னியாகுமரி	நாகர்கோவில்

போக்குவரத்துக் கழகங்கள், உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான நடத்துனர் பணப்பைகள், கையுறைகள், காலணிகள், கோப்பு பெட்டிகள் மற்றும் இரப்பர் நார் மெத்தைகள் போன்றவை மேற்காணும் அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) இவ்வலகுகளில் ரூ.56.57 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தியும், ரூ.81.77 இலட்சம் அளவிற்கு விற்பனையும் செய்யப்பட்டுள்ளது.

4.4. கைமுறை காகித அலகுகள்

வாரிய கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் கைமுறை காகித அலகுகள் செயல்பட்டு வருகின்றன:

வ.எண்	மாவட்டம்	அலகு இருப்பிடம்
1.	விழுப்புரம்	பிடாகம்
2.	ஈரோடு	செண்பகபுதூர்
3.	திருப்பூர்	திருப்பூர்
4.	கடலூர்	வடலூர்

இவ்வலகுகளில் கச்சா அட்டைகள், கோப்பு அட்டைகள் மற்றும் அட்டைப்பெட்டிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ்வலகுகள் மூலம் 2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியன முறையே ரூ.33.38 இலட்சம் மற்றும் ரூ.20.84 இலட்சம் மதிப்பிற்கு நடைபெற்றுள்ளது.

4.5. தேன் பதப்படுத்தும் அலகு

வாரிய கிராமத் தொழில்களில் தேன் பதப்படுத்துதலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 12,000 தேனீ வளர்ப்போர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படும் பச்சைத் தேன், அம்மாவட்டத்திலுள்ள அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு "அக்மார்க்" தரச் சான்றிதழுடன் வாரிய கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், சென்னை குறளகம், திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பதப்படுத்தப்பட்ட தேனை பாட்டில்களில் நிரப்பி தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பி வைக்கும் வகையில் தேன் நிரப்பும் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

வாரியம் மூலம் விற்பனை செய்யப்படும் தேன் சிறந்த தரத்துடன் இருப்பதால் வாடிக்கையாளர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) தேன் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.59.02 இலட்சம் மற்றும் ரூ.134.19 இலட்சம் மதிப்பிற்கு நடைபெற்றுள்ளது.

4.6. இதர கிராமத் தொழில் அலகுகள்

வாரியத்தின் பிரதான உற்பத்தி அலகுகளான சோப்பு அலகு, தச்சு மற்றும் கருமார அலகு, தோல் பொருட்கள் அலகு , கைமுறை காகித அலகு ஆகியவற்றில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மட்டுமின்றி கிராமப்புரங்களில் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படும் கிராமப் பொருட்களான ஜவ்வாது,

சாம்பிராணி, தைலம், மூலிகை பற்பொடி ஆகியனவும் கிராமப்புர தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட வாரியத்தால் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

4.6.1. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வேடப்பட்டியில் ஜவ்வாது பவுடர், கப் சாம்பிராணி, கம்ப்யூட்டர் சாம்பிராணி, கற்பூரம், பன்னீர், பூஜா பவுடர் ஆகிய பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வலகில் புதிதாக ஜவ்வாது வாசனை திரவியம் மற்றும் "பூஜை கிப்ட் பாக்ஸ்" ஆகியவையும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் 2023–2024–ஆம் நிதி ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

4.6.2. சிவகங்கை மாவட்டம் கண்டனூரில் அகர்பத்திகள் மற்றும் சந்தன மாலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

4.6.3. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மாமண்டூர் அலகில் "சுகப்பிரியா" என்ற பெயரில் தூய யூகலிப்ட்ஸ் தைலத்தினை பிரதான மூலப் பொருளாகக் கொண்டு வலி நிவாரணித் தைலம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வலிநிவாரணித் தைலத்திற்கு பொது மக்களிடையே நல்லதொரு வரவேற்பு உள்ளது.

4.6.4. திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் "மூலிகா" பல்பொடி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

4.6.5. பாரம்பரியமிக்க வாகை மர செக்குகளினால் மக்களின் உடல் நலனுக்கு உகந்த தரமான கடலெண்ணெய் மற்றும் நல்லெண்ணெய்

வகைகள் சென்னை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், மற்றும் கண்டனூர் ஆகிய இடங்களில் உள்ள அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) ரூ.84.91 இலட்சம் மதிப்பிற்கு இதர கிராமப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.111.97 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

5. நலத்திட்டங்கள்

5.1. நூற்போர் மற்றும் நெசவாளர்கள் நல நிதி

வாரியத்தால், நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி பேணப்பட்டு வருகிறது. நெசவாளர்கள் தங்கள் கூலியிலிருந்து 12% தொகையை இந்நலநிதிக்கு

வழங்குவதுபோல் அதே அளவு 12% தொகையை வாரியமும் வழங்குகிறது. நூற்போர் மற்றும் நெசவாளருக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில், திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகை கால செலவினம் போன்றவற்றிற்கு அவர்களது கணக்கில் உள்ள தொகைக்கு ஏற்ப நிதி உதவி வழங்கப்படுகிறது. அவர்களது கணக்கில் உள்ள முழுத் தொகையும் அவர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்படுகிறது. மேலும், வாரியம் கூலியுடன் 10% கூலித்தொகையை ஊக்குவிப்பு தொகையாக வழங்கி வருகிறது.

5.2. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணியில் ஈடுபட்டு வரும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கான நலவாரியம் அமைக்கப்பட்டு நல உதவிகள் வழங்கப்பட்டு

வருகின்றன. இதற்கென இவ்வாரியத்திற்கு ரூ.100.00 இலட்சம் அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நல உதவித் தொகைகள் பின்வருமாறு:

வ. எண்.	உதவிகளின் விவரம்		தொகை (ரூ.)
1.	**விபத்து ஈட்டுறுதி திட்டம்**		
	அ.	விபத்தினால் மரணம் ஏற்பட்டால்	1,00,000/–
	ஆ.	விபத்தினால் உடல் உறுப்பு இழப்பு/பாதிப்பு ஏற்பட்டால் அவற்றின் தன்மைக்கேற்ப	10,000/– முதல் 1,00,000/– வரை
2.	**இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை**		15,000/–
3.	**ஈமச்சடங்கு செலவு**		2,000/–
4.	**கல்வி உதவித் தொகை**		
	அ.	10–ஆம் வகுப்பு படித்து வரும்	1,000/–

வ. எண்.	உதவிகளின் விவரம்		தொகை (ரூ.)
		பெண் குழந்தைகளுக்கு	
	ஆ.	10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,000/–
	இ.	11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000/–
	ஈ.	12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,500/–
	உ.	12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500/–
	ஊ.	முறையான பட்டப் படிப்பிற்கு	1,500/–
		விடுதி வசதியுடன் முறையான பட்டப் படிப்பிற்கு	1,750/–
	எ.	முறையான பட்ட மேற்படிப்பிற்கு	2,000/–
		விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு	3,000/–
	ஏ.	தொழில் கல்வி பட்டப் படிப்பிற்கு	2,000/–
		விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப் படிப்பிற்கு	4,000/–
	ஐ.	தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	4,000/–

வ. எண்.	உதவிகளின் விவரம்		தொகை (ரூ.)
		விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	6,000/–
	ஒ.	ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு	1,000/–
		விடுதி வசதியுடன் ஐ .டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு	1,200/–
5.		**திருமண உதவித் தொகை**	2,000/–
6.		**மகப்பேறு உதவித் தொகை**	
	அ.	மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள், மகப்பேறுக்குப் பின் 3 மாதங்கள்)	6,000/–
	ஆ.	கருக்கலைப்பு/கருச்சிதைவு	3,000/–
7.		**மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்**	500/– வரை
8.		**முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)**	1,000/–

2010–2011 முதல் 2024–2025–ஆம் ஆண்டில், 1,459 நூற்போர் மற்றும்

நெசவாளர்களுக்கு ரூ .81.57 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

5.3. மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள்

மண்பாண்டத் தொழில் தமிழகத்தின் தொன்மையான தொழில்களில் ஒன்றாகும். இத்தொழில் கிராமப்புரங்களில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்த உதவுகிறது.

வாரியத்தின் கட்டுப்பாட்டில் 33 மண்பாண்டத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் 3,816 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

மழைக்காலங்களில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மண்பாண்டத் தொழிலாளர்களின் இன்னல்களைப் போக்க மழைக்காலப் பராமரிப்பு

உதவித் தொகையாக ஆண்டொண்டிற்கு தலா ரூ.5,000/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 7,634 மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மின்சாரத்தால் இயங்கும் விலையில்லா மண்பாண்டச் சக்கரங்களும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

6. வணிக அபிவிருத்தி நிதியுதவி(MDA)

6.1. கதர் கிராமத் தொழில்கள் ஆணையம்(KVIC)

கதர் கிராமத் தொழில்கள் ஆணையம், கதர் உற்பத்தி மற்றும் விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில் **"வணிக அபிவிருத்தி நிதி உதவித் திட்டத்தினை"** 2010–2011–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

வணிக அபிவிருத்தி நிதி உதவித் திட்டம் என்பதை **"திருத்திய வணிக அபிவிருத்தி நிதி உதவித் திட்டம் (MMDA)"** என 2016–2017–ஆம் ஆண்டு முதல் மாற்றம் செய்து கதர் உற்பத்தியின்

முதன்மை செலவின மதிப்பில் 30% என கணக்கிட்டு அதனை நிதியுதவியாக, காலாண்டு வாரியாக பிரித்து வழங்கி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் 70 சர்வோதய சங்கங்கள் ஆகியவற்றில் உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு 30% ஊக்கத்தொகையும், கைவினைஞர்களுக்கு 10% ஊக்கத்தொகையும் கதராணையம் மூலமாக ஒவ்வொரு காலாண்டிற்கும் அவர்களது வங்கிக் கணக்கிற்கு மின்னணுத் தீர்வை மூலம் அனுப்பப்பட்டு அதன் விவரம் கதராணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 60% தொகை சர்வோதய சங்கங்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரிய கணக்கில் கதராணையத்தால் உற்பத்தி, உட்கட்டமைப்பு, திறன் மேம்பாடு மற்றும் விற்பனை உட்கட்டமைப்பு மற்றும் வணிக மேம்பாடு

போன்றவைகளுக்காக வரவு வைக்கப்பட்டு வருகிறது.

6.2. மாநில அரசு

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சர்வோதய சங்கங்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவி, கதர் இரகங்களின் உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் 20% மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) மாநில அரசு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு ரூ.4.00 கோடியும், சர்வோதய சங்கங்களுக்கு ரூ.16.50 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

7. தொழில் கூட்டுறவு சங்கங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியக் கட்டுப்பாட்டின் கீழ் 168 தொழில் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயற்பதிவாளர், வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் ஆவார் . கூட்டுறவு தணிக்கைத் துறையால் இத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன.

இச்சங்கங்களால் ரூ.2,647.07 இலட்சம் மதிப்பிற்கு பொருட்கள் 2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) உற்பத்தி செய்யப்பட்டு ரூ.2,983.41 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

8. வணிகம்

8.1. கதர் அங்காடிகள்

வாரியத்தின் அ லகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்கள், சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் "காதி கிராப்ட்" என்ற பெயரில் 39 விற்பனை

அங்காடிகளில் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வாரிய உற்பத்தி பொருட்கள் தவிர , மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தனித்துவமான, சிறப்பு பெற்ற மற்றும் தரமான கிராமத் தொழில் பொருட்களும் தகுதியான நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

8.2. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பு சேர்க்கும் கிராமப் பொருட்களின் விற்பனை

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பு சேர்க்கும் கிராமத் தொழில் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்து சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்புப் பெற்ற மற்றும் தனித்துவமான கிராமத் தொழில் தயாரிப்புகளை அடையாளம்

காணுதல், செயல்முறை, வடிவமைப்பு மற்றும் தர நிர்ணயம், சந்தையில் போட்டியிடும் வகையில் பொருட்களின் விலையை நிர்ணயித்தல் மற்றும் கதர் அங்காடிகள், சர்வோதய சங்கங்கள் மற்றும் தனியார் சிறப்பு அங்காடிகள் மூலம் சந்தைப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.227.26 இலட்சம் மதிப்பிலான கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

8.3. இணைய வழி விற்பனை

வாரிய உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு tnkvib.org மற்றும் tnkvib.com இணையதளங்கள் வாயிலாகவும், இளைய தலைமுறையினரை கவரும் வகையில் "Tnkhadi" எனும் கைபேசி

செயலி வாயிலாகவும் இணையவழி விற்பனை நடைபெற்று வருகிறது.

மேலும், அமேசான் (Amazon) மற்றும் பிளிப்கார்ட் (Flipkart) போன்ற மின்னணு வணிகத் (e–Commerce) தளங்கள் வாயிலாகவும் கதர் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொது மக்களிடத்தில் கதர் கிராமப் பொருட்களை விளம்பரப்படுத்தி விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்திலும் , இளைஞர்களை கவரும் வகையிலும், சமூக ஊடகங்களான படவரி (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (YouTube) மற்றும் எக்ஸ் தளம் (X) ஆகியவற்றின் மூலம் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

8.4. தனியுரிமைக் கிளைகள் (Franchise Branches)

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தவும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது இருப்பிடத்தின் அருகிலேயே வாரிய உற்பத்தி பொருட்கள் கிடைத்திடும் வகையிலும் தனியுரிமைக் கிளைகள் அமைப்பதற்கு தனி நபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.5. கண்காட்சிகள் மற்றும் விற்பனை

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்துவதற்கும் அவற்றின் விற்பனையை அதிகரிப்பதற்கும் வேண்டி பல்வேறு தனியார், அரசு அலுவலக மற்றும் கல்லூரி வளாகங்களில்

அவ்வப்போது கண்காட்சிகள் நடத்தப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், ஆண்டுதோறும் சென்னை குறளகம் பிரதான கதரங்காடியில் கொலு பொம்மைகள் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2024–2025–ஆம் நிதி ஆண்டில் ரூ.38.00 இலட்சம் மதிப்பிலான கொலு பொம்மைகள், கதர் கிராமப் பொருட்கள், டெரகோட்டா பொம்மைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

9. வணிக வளர்ச்சி முன்னெடுப்புகள்

- வாரியமானது விற்பனையை அதிகரிக்க வேண்டி புவிசார் குறியீடு பெற்ற பல்வேறு கிராமப் பொருட்கள் மற்றும் உடல் நலத்திற்கு ஏற்ற மூலிகை பொருட்கள் ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து

கதரங்காடிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- வாரிய தச்சு மற்றும் கருமார அலகுகளில் உற்பத்தியின்போது கிடைக்கப்பெறும் மரத்துண்டுகளிலிருந்து அழகிய பண/ ஆபரணப் பெட்டிகள் தயார் செய்யப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து கதரங்காடிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து தேக்கு மரத்திலான நாற்காலி, அலமாரி, உணவருந்தும் மேசை போன்ற தளவாடங்களுக்கான தேவை நமூனாக்கள் ரூ.197.00 இலட்சம் மதிப்பிற்கு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- வாரியம் மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள தொழில் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்திற்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்களை அதன் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் நிலங்களை தவிர்த்து பிறவற்றை அந்நோக்கங்களுக்காகப் பயன்படுத்த குத்தகை மற்றும் வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்களால் 01.01.2025 அன்று கீழ்க்காணும் புதிய வாரிய உற்பத்தி இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன:

  அ) புதிய இரக ஆரணி சரிகைக்கரை பட்டுப்புடவைகள்.

  ஆ) புதிய இரக பட்டு நூல் புடவைகள்.

இ) நவீன வடிவிலான அச்சிடப்பட்ட புதிய ரெடிமேட் சட்டைகள்.

ஈ) ஆப்பிள் கிரீன் கண்ணாடி சோப்பு.

உ) நவீன வடிவமைப்புடன் கூடிய தோலினாலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான காலணிகள்.

- மலேசிய நாட்டின் பினாங்கு மாநிலத்தில் 04.01.2025 மற்றும் 05.01.2025 ஆகிய இரு நாட்களில் உலகத்தமிழ் வம்சாவளி வர்த்தக சபையில், நடைபெற்ற சர்வதேச வணிக சந்திப்பு கண்காட்சி மற்றும் உலகளாவிய வர்த்தக இணைப்பு மாநாட்டில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக மாண்புமிகு துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு வாரிய உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

- வாரியத்தின் கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்கள் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் காட்சிக்கு வைக்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

10. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் 2008–2009–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர், ஒன்றிய அரசின் கதர் கிராம தொழில்கள் ஆணைக்குழு மற்றும் தென்னை நார் வாரியம் ஆகிய நான்கு துறைகளின் மூலம் ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது

01.07.2016 முதல் இணையவழி வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் நிதி ஆண்டிலிருந்து பயனாளிகளுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் உற்பத்தித் துறையில் ரூ.50.00 இலட்சம் ஆகவும், சேவைத் துறையில் ரூ.20.00 இலட்சம் ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை), 368 அலகுகள் மூலம் ரூ.1,520.95 இலட்சம் விளிம்புத்தொகை ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு 4,739 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், 2018–2019–ஆம் நிதி ஆண்டு முதல் ஏற்கெனவே மானியம் பெற்று திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கும் அலகுகளை விரிவுபடுத்தவும், நவீனமயமாக்கவும் வேண்டி மீண்டும் இரண்டாவது முறையாக கடன் தொகை

கொடுத்து உதவிடும் திட்டத்தை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ் உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.100.00 இலட்சம் வரையிலும் மற்றும் சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.25.00 இலட்சம் வரையிலும் கடன் தொகை அனுமதிக்கப்படுகிறது.

11. கதர் கிராமப் பொருட்கள் – உற்பத்தி மற்றும் விற்பனை

2023–2024 மற்றும் 2024–2025 ஆகிய நிதி ஆண்டுகளில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்.	தொழில்	2023–2024		2024–2025 (பிப்ரவரி 2025 வரை) (தணிக்கைக்கு முன்பு)	
		உற்பத்தி	விற்பனை	உற்பத்தி	விற்பனை
1.	கதர்	968.14	1,569.25	893.51	861.08
2.	கிராமத் தொழில்கள்				
	அ. சோப்பு	1,716.81	1,780.93	1294.95	1515.78
	ஆ. தச்சு மற்றும் கருமாரம்	763.33	763.08	625.93	428.67
	இ. தோல் பொருட்கள்	123.73	109.67	56.57	81.77
	ஈ. கைமுறைக் காகிதம்	51.76	37.64	33.38	20.84
	உ. தேன்	80.86	147.27	59.02	134.19
	ஊ. இதர தொழில்கள்	87.38	161.92	84.31	111.97
	எ. ஒரு மாவட்டம் ஒரு பொருள்	—	474.62	—	277.26
3.	தொழில் கூட்டுறவு சங்கங்கள்	2,411.61	3,490.07	2647.07	2983.41
	மொத்தம்	**6203.62**	**8,534.45**	**5694.74**	**6414.97**

12. 2024–2025–ஆம் நிதி ஆண்டில் வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

12.1. மண்பாண்டத் தொழில்

- மழைக் காலத்தில் மண்பாண்டத் தொழிலாளர்கள் தொழில் செய்ய இயலாத காரணத்தினால் அவர்களின் இன்னல்களை போக்கிட மழைக்காலப் பராமரிப்பு உதவித் தொகையாக ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000/- வீதம், 9,223 மண்பாண்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.461.15 இலட்சம், 2024-2025-ஆம் நிதி ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

- 2022-2023-ஆம் நிதி ஆண்டில் 2,175 மண்பாண்ட தொழிலாளர்களுக்கு ரூ.465.88 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டத்தில், தொகை ரூ.349.15 இலட்சம் மதிப்பிலான 1,630 மண்பாண்ட மின் விசை சக்கரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- நீலகிரி மாவட்டம் கோக்கால், திருச்சிராப்பள்ளிக்கடி, கீழ்க்கோத்தகிரி, புதுக்கோத்தகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில் மண்பாண்டங்கள் செய்யும் கோத்தாஸ் பழங்குடி மக்களின் உற்பத்தித் திறனை அதிகரித்திட இலவசமாக 100 நவீன மின்விசை மண்பாண்டச் சக்கரங்கள் ரூ.22.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- 02.10.2024 அன்று நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவின்போது ஒரு சிறந்த கதர் நூற்பாளர், ஒரு சிறந்த கதர் நெசவாளர் மற்றும் ஒரு சிறந்த பட்டு நெசவாளர் ஆகியோரின் பங்களிப்பை ஊக்கப்படுத்துவதற்காக தலா ரூ.25,000/– வீதம் ரொக்க பரிசும், பாராட்டுச் சான்றிதழுடன் கேடயமும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

12.2. தச்சு மற்றும் கருமார அலகு

- கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு 1,287 தேக்குமர டெஸ்க்குகள் மற்றும் தேக்குமர பெஞ்ச் ஆகியன ரூ.165.00 இலட்சம் மதிப்பிற்கு வாரிய தச்சு மற்றும் கருமார அலகுகளில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

- செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படும் நீதிமன்றங்களுக்கான மர தளவாட சாமான்கள் ரூ.29.00 இலட்சம் மதிப்பிற்கு வாரிய தச்சு மற்றும் கருமார அலகுகளில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

13. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959–இல் இயற்றப்பட்டதின்

நோக்கமானது கிராமப்புர ஏழை கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல், கிராமப்புர ஏழை மக்களுடைய சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பு நம்பிக்கையினை வளர்த்தல், கிராமப்புர கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி மற்றும் இலாபத்தினை மேம்படுத்தல் ஆகும்.

செப்டம்பர் 2015–இல் இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, ஐக்கிய நாடுகள் சபையின் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் அதனைச் சார்ந்த 169 தொடர் இலக்குகளை உள்ளடக்கிய நிலையான நீடித்த வளர்ச்சி 2016–2030–க்கான நிகழ்ச்சி நிரலில், "நமது உலகத்தை உருமாற்றுதல்: 2030–க்கான வளர்ச்சி நிகழ்ச்சி நிரல்" என்ற இலக்குகள்

சமுதாயத்தின் நலனுக்கான பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நல்வாழ்வின் அம்சங்களை உள்ளடக்கியது.

- ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சி இலக்கு அறிக்கை, 2015–இன்படி, 2030–ஆம் ஆண்டுக்குள், இலக்கு 8.5–ஆன இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு முழுமையான உற்பத்தித் திறன் கொண்ட வேலைவாய்ப்பு மற்றும் சம மதிப்புள்ள வேலைக்கு சம ஊதியம் ஆகியவற்றை அடைதல்.

- நீடித்த வளர்ச்சி இலக்கு அறிக்கை, 2015–இன்படி, 2030–ஆம் ஆண்டுக்குள், இலக்கு 8.7–ஆன குழந்தை தொழிலாளர், நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதை

நோக்கமாகக் கொண்டுள்ளது. கட்டாய உழைப்பை ஒழிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- வாரியமானது இலக்கு 8.5 மற்றும் 8.7–ஐ கிராமப்புர மற்றும் நகர்ப்புர கைவினைஞர்களுக்கு கதர் மற்றும் கிராமத் தொழில்களில் உரிய சமமான வேலை வாய்ப்பினை அளித்து பொருளாதாரம் மேம்பட உதவி புரிகிறது.

- நீடித்த வளர்ச்சி இலக்கு அறிக்கை, 2017–இன்படி, இலக்கு 8–ஆன நீடித்த, உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி, முழுமையான மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட வேலைவாய்ப்பு மற்றும் அனைவருக்கும் உகந்த வேலையை ஊக்குவித்தலை, வாரியம் அடையும் பொருட்டு கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள

மகளிர் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் உகந்த வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது.

மேலும், வாரிய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அலகுகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணி அமர்த்தப்படுவதில்லை.

14. அரசின் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் முறையே ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கவும் , கதர் உற்பத்தி இரகங்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவி வழங்கவும் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கவும் வேண்டி, தேவையான நிதியுதவியை மாநில அரசு வழங்கி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் ஆகியவற்றிற்கு 2025-2026-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்.	விவரம்		தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான மானியம்		9512.30
2.	தள்ளுபடி மானியம்	கதர் வாரியத்திற்கு	400.00
		சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு	2200.00
3.	தணிக்கை கட்டணம்		298.45
4.	கிராமத் தொழில் மேம்பாட்டிற்கான உதவி		98.12
5.	தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்		0.01
6.	கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம்		0.01
7.	மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை		475.00
8.	மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மின்விசைச் சக்கரங்கள் வழங்குதல்		0.01
		மொத்தம்	**12983.90**

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

1994–ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் , 15–இன்கீழ், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் தொடங்கப்பட்டு 06.01.1995 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. 310 ஆரம்ப பனை வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் , 8 மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியன இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

- பதநீர் இறக்குதல் மற்றும் ஏனைய பனை பொருட்கள் உற்பத்தி செய்வதை ச் சார்ந்துள்ள பனைத் தொழிலாளர்களுக்கு இலாபகரமான பணிவாய்ப்பை ஏற்படுத்துதல்.
- பனை பொருட்களை உற்பத்தி செய்வதிலும், அவற்றை பயன்படுத்துவதிலும் நவீன கோட்பாடுகளை அறிமுகப்படுத்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துதல்.
- பொதுமக்களைக் கவரும் வகையிலும் மற்றும் அவர்கள் வாங்கக்கூடிய விலையிலும் பனை பொருட்கள் கிடைக்கச் செய்தல்.
- பனைத் தொழிலை மேம்படுத்த பல நிலைகளில் உள்ள ஆரம்ப கூட்டுறவு சங்கங்களையும், சமமேளனங்களையும் ஒருங்கிணைத்தல்.
- பனைப்பொருள் உற்பத்திக்குத் தேவையான நவீன கருவிகள் மற்றும் உபகரணங்கள்

பனைத் தொழிலாளர்களுக்கு கிடைக்கச் செய்தல்.

- பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்க நிறுவன ரீதியாக ஊக்கமளித்தல்.

2. நிருவாகம்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியாளர்களால், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார்கள். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவல ரே இவ்வாரியத்தின் செயற்பதிவாளர் ஆவார்.

இதர அலுவல் சார் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

1. அரசு செயலாளர்,

   கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.

2. தலைமைச் செயல் அலுவலர்,

   தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

3. கூடுதல் காவல் துறை இயக்குநர்

   (மதுவிலக்கு மற்றும் கலால்).

4. அரசு இணை இயக்குநர் , நிதி(BPE)த் துறை.

5. தலைமைச் செயல் அலுவலர்

   (அலுவலால்),

   தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்.

3. பதநீர் உரிமம்

பதநீர் இறக்குவதற்கான உரிமங்களை வழங்கவும், புதுப்பிக்கவும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசால் ஒவ்வொரு நிதியாண்டிலும் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

பனைத் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்கவும் அதனை விற்பனை செய்யவும் 2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) 2,612 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4. 2024–2025–ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

- பனை மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் ரூ.36.00 இலட்சம் மதிப்பில் 12 இலட்சம் தரமான பனை விதைகள் மாநில இணையத்தின் கிளைகள் மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 100% மானியத்தில் பனை மரம்

வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

- 250 மகளிருக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி ரூ.31.28 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.
- 400 பனை விவசாயிகளுக்கு தரமான பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு தயாரிப்பதற்கான பயிற்சி ரூ .25.68 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணத்தில் மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்திற்குச் சொந்தமான இடத்தில் நவீன முறையில் நிறுவப்பட்டுள்ள பனைவெல்லம் தயாரிக்கும் பொது சேவை மையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பனைவெல்லத்தை

பாதுகாப்பாக இருப்பு வைத்திடவும் மற்றும் பனை ஓலைப் பொருட்களை இருப்பு வைத்திடவும் ரூ.20.00 இலட்சம் செலவில் கிடங்கு / தொழிற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணைய மானாமதுரை கிளையில் பனந்தூரிகை தயாரிக்கும் தொழில்நுட்ப பயிற்சி 60 நாட்கள், 25 நபர்களுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

5. பனை பொருட்கள் விற்பனை

உண்ணும் மற்றும் உண்ணா பனை பொருட்கள் கதரங்காடிகள் , பாம் கிராப்ட்கள் , கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வரும் நியாய விலைக் கடைகள் / மொத்த விற்பனைக் கடைகள், ஆவின் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிபக் கழக அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

5.1. பதநீர்

பனை பொருட்களுக்கு அடிப்படையானது பதநீர் ஆகும். பனை மரங்களில் இருந்து பருவ காலத்தில் இறக்கப்படும் இயற்கை பானமான பதநீர், மக்கள் விரும்பி அருந்தக்கூடிய பிரபலமான பானமாகும். பனைவெல்லம் (கருப்பட்டி), பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை போன்ற பல்வேறு பனை உணவுப் பொருட்கள் பதநீரை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.

2024–2025–ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) உண்ணும் பனை பொருட்கள் உற்பத்தி செய்யவும் மற்றும் பருகுவதற்கு விற்பனை செய்யவும், பதநீர் இறக்குபவர்களிடமிருந்து 1.25 இலட்சம் லிட்டர் பதநீர் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

5.2. பனை பொருட்கள் மற்றும் சுக்கு காபி விற்பனை

பல்வேறு அளவுகளில் பனை வெல்லமானது பொது விநியோகத் திட்ட கடைகளுக்கு "கற்பகம்" என்ற பெயரிலும், பல்பொருள் சிறப்பு அங்காடிகளுக்கு "கரும்பனை" என்ற பெயரிலும், தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆரோக்கியம் மற்றும் பாரம்பரிய இயற்கை பானங்கள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள நிலையில் , ஒன்பது வகையான மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் பனை வெல்லம் கலந்த சுக்கு காபி தூள், பனை வாரியத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு சென்னையில் பல்வேறு இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை , ஊட்டி மற்றும் சென்னை குறளகம் ஆகிய இடங்களில் சுக்கு காபி தூள் உள்ளிட்ட பனை பொருட்கள் மற்றும் கதர் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பனை பொருட்களை சந்தைப்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் 10 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் பனை பொருள் விற்பனை அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன:

வ. எண்	மாவட்டம்
1.	இராணிப்பேட்டை
2.	வேலூர்
3.	திருவண்ணாமலை
4.	விழுப்புரம்
5.	பெரம்பலூர்
6.	தஞ்சாவூர்
7.	புதுக்கோட்டை
8.	நாகப்பட்டினம்

9.	தூத்துக்குடி
10.	தேனி

5.3. பனை ஓலைப் பொருட்கள்

பனைத் தொழில் கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் இதர பனை பொருட்களான பனந்தும்பு தூரிகைகள் , பனை ஓலை விசிறிகள் , பாய்கள், கூடைகள் , பனை நார் பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான இயற்கையான வண்ணம் பூசப்பட்ட மற்றும் வண்ணம் பூசப்படாத பனை ஓலை கைவினைப் பொருட்கள் ஆகியனவும் விற்பனை செய்யப்படுகின்றன.

5.4. இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பனை பொருட்கள் விற்பனை

பனை பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு tnkvib.org மற்றும் tnkvib.com இணையதளங்கள் வாயிலாகவும், இளைய தலைமுறையினரை கவரும் வகையில்

"Tnkhadi" எனும் கைபேசி செயலி வாயிலாகவும் விற்பனை நடைபெற்று வருகிறது.

மேலும், அமேசான் (Amazon) மற்றும் பிளிப்கார்ட் (Flipkart) போன்ற மின்னணு வணிகத் (e–Commerce) தளங்கள் வாயிலாகவும் பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொது மக்களிடத்தில் பனை பொருட்களை விளம்பரப்படுத்தி விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்திலும், இளைஞர்களை கவரும் வகையிலும், சமூக ஊடகங்களான படவரி (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (YouTube) மற்றும் எக்ஸ் தளம் (X) ஆகியவற்றின் மூலம் பனை பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

6. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

ஆண்டு	**உற்பத்தி**	**விற்பனை**
2022–2023	1,817.70	2,084.35
2023–2024	1,909.86	2,146.85
2024–2025* (பிப்ரவரி 2025 வரை)	1,820.55	2,082.45

***தணிக்கை செய்யப்படவுள்ளது**

புகைப்படங்கள்



கதர் நூற்பு நிலையம், கண்டனூர்,
சிவகங்கை மாவட்டம்.



கதர் உப கிளை, கெட்டிச்செவியூர்,
திருப்பூர் மாவட்டம்



கதர் பட்டு உப கிளை, நரிக்கல்ப்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்



சலவை சோப்பு அலகு, பண்ருட்டி, கடலூர்
மாவட்டம்



குளியல் சோப்பு அலகு, கண்டனூர், சிவகங்கை மாவட்டம்



தச்சு மற்றும் கருமார அலகு, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம்.



காலணி உற்பத்தி அலகு, குகை, சேலம் மாவட்டம்



கைமுறை காகித அலகு, வடலூர், கடலூர் மாவட்டம்



தேன் பதப்படுத்தும் அலகு, அம்சி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்



அகர்பத்தி அலகு, கண்டனூர், சிவகங்கை மாவட்டம்



மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் லிட்., மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்



பதநீர் சேகரித்தல்



பனை ஓலை தொழிற் கூட்டுறவு சங்கம்,
மணப்பாடு, தூத்துக்குடி மாவட்டம்